மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், திருச்சுழி.

**அசல் வழக்கு எண். 39/2024**

வாதி/பிரதிவாதி சாட்சியின் வாக்குமூலம் (1873ம் ஆண்டு சாட்சியச்சட்டம் 44வது பிரிவு 5ஆவது விதியின் ஏற்பாட்டின்படி) திரு.அசோக்சுப்பிரமணி, இளநிலை உதவியாளர் என்பவரால் ஆணையிட்டு சத்தியபிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

| | |
|---|---|
| பெயர் : பெரியாம்பிள்ளை (பி.வா.சா.1)<br>த/பெ.க/பெ :<br>கிராமம் :<br>தாலுகா : | சாதி :<br>மதம் :<br>தொழில் :<br>வயது : |

06.11.2025

**முதல் விசாரணை தொடர்ச்சி –**

இவ்வழக்கின் பிரதிவாதி ஆவேன். பிரதிவாதி தரப்பு 1வது சாட்சி ஆவேன்.

1. 19.06.1996ம் தேதியிட்ட 1ம் பிரதிவாதி வாதிக்கு எழுதிக் கொடுத்த கிரைய ஆவணம் சான்றிட்ட நகல் **பிவாசாஆ 1** ஆகும்.

2. 22.01.2009ம் தேதியிட்ட 1ம் பிரதிவாதிக்கு பூசாரி வேல்முருகன், கருப்பன் எழுதிக் கொடுத்த விடுதலை பத்திரம் அசல் **பிவாசாஆ 2 ஆகும்**.

3. சர்வே எண். 59/8ல் 1ம் பிரதிவாதியின் பெயரில் உள்ள பட்டா 398 அசல் **பிவாசாஆ 3** ஆகும்.

4. நரிக்குடி காவல் நிலையத்தில் புகார் மனுவுடன் புகார் மனு ஏற்வு சான்றிதர் அசல் **பிவாசஆ 4** ஆகும்.

5. 1ம் பிரதிவாதி 2ம் பிரதிவாதிக்கு எழுதிக் கொடுத்த கிரையப்பத்திரம் **பிவாசாஆ 5 ஆகும்**.

**வாதி தரப்பு குறுக்கு விசாரணை –**

வாதி ஜமால்பீவியை எனக்கு பிறந்ததில் இருந்தே தெரியும். வாதிக்கு எழுதப்படிக்க தெரியுமா என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. வாசாஆ1 ஆவணத்தில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். அதனை நான் தான்

எழுதிக் கொடுத்துள்ளேன். வாசாஆ 1 ஆவணத்தில் உள்ள நான்குமால் தாவா சொத்திற்குரியது என்றால் சரிதான். அந்த ஆவணத்தில் என்ன சர்வே எண் போடப்பட்டுள்ளது என்று எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. சர்வே எண். 59/8 என்பதற்கு பதிலாக 59/3 என்று தவறுதலாக போடப்பட்டுள்ளது என்றால் நான் எழுதிக் கொடுத்தது சர்வே எண்.59/3 ஆகும். சர்வே எண். 59/8 என்பது மொத்தம் 26 செண்ட் ஆகும். 2ம் பிரதிவாதிக்கு 26 செண்ட் எழுதிக் கொடுத்துள்ளேன். சர்வே எண். 59/8ல் 14 செண்டிற்கு வாதி பெயரில் பட்டா கொடுத்துள்ளார்கள் என்றால் பட்டா கொடுக்கவில்லை. மீதியுள்ள 12 செண்டை 2ம் பிரதிவாதி லீனாவுக்கு பட்டா உள்ளதா என்றால் 26 செண்டிற்கும் பட்டா உள்ளது. லீனா பெயரில் உள்ள பட்டாவை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேன் என்றால் தாக்கல் செய்துள்ளேன். பட்டா எண்.152 எனது பெயரில் உள்ள பட்டா என்றால் எனக்கு தெரியாது. வாசாஆ 2 முதல் வாசாஆ 4 தீர்வை ரசீதுகள் தாவா சொத்திற்குரிய ரசீதுகள் என்றால் ரோட்டிற்கு வடபுறம் 14 செண்டிற்கு போடப்பட்டுள்ளது. இந்த வழக்கு 2007ம் ஆண்டு போடப்பட்ட வழக்கு என்றால்சரிதான். இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்ட பிறகு 2011ம் ஆண்டு லீனாவிற்கு வாசாஆ 6 கிரைய ஆவணம் ஏற்படுத்திக் கொடுத்துள்ளேன் என்றால் ஆமாம். வாசாஆ 6 கிரைய ஆவணத்தில் தாவா சொத்து எனக்கு பூர்விக பாத்தியம் என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் நான் கிரையம் வாங்கிய சொத்தாகும். யாரிடம் இருந்து கிரையம் வாங்கினேன் என்றால் வே.கருப்பன், பூசாரி, வேல்முருகன் ஆகியோரிடமிருந்து கிரையம் வாங்கினேன். எந்த வருடம் கிரையம் வாங்கினேன் என்று எனக்கு ஞாபகமில்லை.

2. வழக்கிற்கு பின்புதான் கிரையம் பெற்றேனா என்றால் ஆமாம். எவ்வளவு ரூபாயிக்கு கிரையம் பெற்றேன் என்றால் ரூ.4000/-த்திற்கு கிரையம் பெற்றேன். வாசாஆ 6 ஆவணத்தில் எனது பங்காளிகளிடமிருந்து கிரையம் பெற்றதாக சொல்லப்பட்டுள்ளதா என்றால் சொல்லி உள்ளேன். வாசாஆ 6 ஆவணத்தில் பங்காளிகளிடமிருந்து கிரையம் பெற்றதாக எதுவும் சொல்லவில்லை பூர்விகமாக பாத்தியப்பட்டதாக சொல்லி உள்ளது என்றால்

சரியல்ல. வழக்கிற்கு பின்னர் வாதியை தொந்தரவு செய்யவேண்டும் என்று வாசாஆ 6 ஆவணம் ஏற்படுத்தப்பட்டது என்றால் சரியல்ல. 2ம் பிரதிவாதி லீனா எனது மகள் உறவுமுறை. 2ம் பிரதிவாதி கண்டுகொண்டான்மாணிக்கத்தில் குடியிருந்து வருகிறார். நான் கிரையம் வாங்கும்போது பங்காளிகளுக்கு சார் பதிவாளர் முன்பு வைத்து ரூ.4000/- தொகையை கொடுத்தேனா என்றால் ஆமாம். நான் ரூ.4000/- கொடுக்கப்பட்டதை ஆவணத்தில் பதிந்துள்ளாரா என்றால் எனக்கு அது பற்றி தெரியாது. தாவா சொத்தில் வாதி முதலில் கூரை வீடுபோட்டிருந்தார் என்றால் சரிதான். என்னிடம் கிரையம் வாங்கி வாதி எத்தனை நாள் கழித்து கூரை வீடு போட்டார் என்றால் 5, 6 வருடங்கள் கழித்துபோட்டார், ஆனால் அந்த இடத்தை கொடுக்கவில்லை. வாதி ஆடு மேய்த்து வருகிறார் என்றால் எனக்கு தெரியாது. தாவா வீட்டில்தான் வாதி குடியிருந்து வருகிறார் என்றால் சரிதான். அதன் வீட்டு வரி ரசீது வாதி செலுத்தி வருகிறார் என்றால் எனக்கு தெரியாது. பிறகு கூரை வீடு எடுத்துவிட்டு ஓட்டு வீடு போட்டுள்ளார் என்றால் சரிதான். ஓட்டு வீடு போட்டு எத்தனை வருடம் இருக்கும் என்றால் 2, 3 வருடம் இருக்கும். தாவா சொத்தில் பஞ்சாயத்து குடிநீர் குழாய் வாதி வாங்கியுள்ளார் என்றால் ஆமாம். குடிநீர் குழாய் கட்டணத்தை வாதிதான் செலுத்தி வருகிறார் என்றால் சரிதான். அந்த குடிநீர் குழாய் போட்டு எத்தனை வருடம் இருக்கும் என்றால் எனக்கு தெரியாது. தாவா சொத்தில் இருந்து எவ்வளவு தூரம் நான் தள்ளி குடியிருந்து வருகிறேன் என்றால் 2 மைல் இருக்கும். தாவா சொத்து இருப்பது கண்டுகொண்டான்மாணிக்கம் கிராமம். நான் குடியிருப்பதும் கண்டுகொண்டான்மாணிக்கம் கிராமம் ஆகும். நான் 2 மைல் தள்ளி இருப்பதாக சொல்வது வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. தாவா சொத்தில் உள்ள வீட்டில் வாதி மின்இணைப்பு பெற்றுள்ளார் என்றால் சரிதான். அது எந்த வருடம் மின்இணைப்பு பெற்றார் என்று எனக்கு தெரியாது. வாதி கரிமூட்டம் போட்டு தொழில் செய்து வருகிறார் என்றால் எனக்கு தெரியாது.

3. எனக்கு கடந்த 2 வருடமாக கண் தெரியாது. நான் வாதிக்கு அருப்புக்கோட்டையில் உள்ள முருகன் என்ற வழக்கறிஞர் மூலம் வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பினேன் என்றால் சரிதான். அது **வாசாஆ10** ஆகும். அந்த அறிவிப்பின் தேதி 29.06.2010 என்றால் சரிதான். அந்த அறிவிப்பில் சர்வேஎண்.59/8 நான்குமாலுக்கு குறிப்பிட்டு கிரையம் ஆவணம் வாதி பதிவு செய்துள்ளார் என்று சொல்லப்பட்டுள்ளது என்றால் எனக்கு தெரியாது. சர்வேஎண்.59/8 நான்குமால் தவறாக குறிப்பிடப்பட்ட விபரம் எனக்கு எப்போது தெரியவந்தது என்றால் இன்றைய தேதிவரைக்கும் எனக்கு தெரியாது. தாவா சொத்திற்குரிய நான்குமால் சொத்து விபரம் தவறாக குறிப்பிடப்பட்டது என்ற விபரம் பல ஆண்டுகளுக்கு பிறகு தெரியவந்தது என்று வாசாஆ10 ஆவணத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். நான் வாதியிடம் நான்குமாலை திருத்தி தரச்சொல்லி ஏதேனும் கேட்டேனா என்றால் இல்லை. வாசாஆ10 அறிவிப்பில் நான் வாதியை சீர்திருத்தம் செய்ய பலமுறை கேட்டும் அவர் வரவில்லை என்று சொல்லப்பட்டுள்ளது என்றால் அது தவறு ஆகும். வாதி குடிசை வீடு போடும் போது நான் தடுத்தேனா என்றால் தடுத்தேன். எத்தனை வருடம் கழித்து ஓட்டு வீடு போட்டார் என்றால் 5 வருடங்கள் கழித்து ஓட்டு வீடு போட்டார்கள், அப்போதும் சென்று தடுத்தேன். அப்போது போலிசில் புகார் கொடுத்தேனா என்றால் புகார் கொடுத்தேன். போலிசார் அந்த சொத்தை எனது பங்காளிகளிடம் வாங்கச்சொன்னார்கள், நான் சென்று பங்காளிகளிடம் வாங்கினேன். தாழ்த்தப்பட்டோர் வன்கொடுமை சட்டத்தின் கீழ் வழக்கு போடுவேன் என்று வாசாஆ10 அறிவிப்பில் போடப்பட்டுள்ளது எதற்காக என்றால் வழக்கறிஞர் போட்டிருப்பார். எனது பங்காளி வாதியோடு சேர்ந்து அவரை வீடு கட்டவிட்டார். எனது பங்காளிகள் என்பது எனக்கு கிரையம் கொடுத்தவர்கள். வழக்கறிஞர் அறிவிப்புக்கு வாதி **வாசாஆ13** பதில் அறிவிப்பு அனுப்பினார் என்றால் சரிதான். தாவா வீட்டில் வாதி, அவரது கணவர்,மற்றும் ஒரு மகன் உள்ளார்கள். தாவா சொத்தில் வாதிக்கு குடும்ப அட்டை, வாக்காளர் அட்டை, ஆதார் அட்டை கொடுத்துள்ளார்கள் என்றால் சரிதான். பூசாரி, வேல்முருகன்,

கருப்பன் 22.01.2009ம் வருடத்தில் நான் வாங்கிய கிரைய ஆவணத்தை பிவாசாஆ 2 ஆக தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். அந்த ஆவணத்தில் 3வது பக்கத்தில் எனது அப்பாவும் மேற்படி 3நபர்களின் அப்பாவும் உடன்பிறந்தவர்கள் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

4. சர்வே எண். 59/8 தாவா சொத்தை நீடித்த காலமாக நான்தான் அனுபவம் செய்து வருகிறேன் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் நான் அனுபவித்து வரவில்லை. அந்த ஆவணத்தில் தாவா சொத்திற்கு எனது பங்காளிகள் பெயரில் நில உடமை பதிவேட்டில் தவறுதலாக பட்டா தாக்கல் ஆகி உள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். எந்தவித கிரையத்தொகையும் பெறாமல் நான் கேட்டுக் கொண்டதற்காக விடுதலை ஆவணம் எழுதிக் கொடுத்துள்ளதாக காட்டப்பட்டுள்ளது என்றால் சரிதான். வாதிக்கு எழுதிக் கொடுத்த கிரைய தேதியில் தாவா சொத்து எனக்கு பாத்தியப்பட்டு நான்தான் அனுபவம் செய்து வந்து அதன்பேரில் வாதிக்கு எழுதிக் கொடுத்துள்ளேன் என்றால் ஆதியில் எனது அப்பா பெயரில் இருந்து, அதன் பின்னர் எனது பெயருக்கு வந்தது, நில உடைமை திருத்தத்தில் பங்காளிகள் பெயருக்குசென்றுவிட்டது. சர்வே எண். 59/3 திருச்சுழி – நரிக்குடி ரோட்டிற்கு வடக்கே உள்ளது என்றால் சரிதான். சர்வே எண். 59/8 என்பது திருச்சுழி – நரிக்குடி ரோட்டிற்கு தெற்கே உள்ளது என்றால் சரிதான். இரு சொத்துக்களுமேரோட்டை ஒட்டி உள்ளது என்றால் சரிதான். அந்தஇருசொத்துக்களும் ஒரே மதிப்புடையது என்றால் எனக்கு தெரியாது. பிவாசாஆ 2 வழக்கிற்கு பின்னால் மோசடியாக உற்பத்தி செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. பிவாசாஆ 3 எனது பெயரில் உள்ள பட்டா என்றால் சரிதான். நில உடைமை திருத்த பதிவேட்டில் எனது பெயரில் பட்டா உள்ளது என்றால் சரியல்ல. பிவாசாஆ 4 புகார் மனு மற்றும் ரசீதில் வாதி சர்வே எண்.59/8ல் வீடு கட்டியுள்ளார்என்று ஒப்புக்கொண்டுள்ளேன் என்றால் ஓலை குடிசை போட்டுள்ளார் என்று சொல்லி உள்ளேன். தாவா சொத்தில் எனது பங்காளிகள் மூவருக்கும் எந்த உரிமையும் கிடையாது என்றால் சரிதான். அவர்கள் இந்த

வழக்கிற்கு அவசிய தரப்பினர் இல்லை என்றால் சரிதான். வாதிக்கு கிரையம் கொடுக்கும்போது தாவா சொத்து எனக்கு பாத்தியம் இல்லை என்று வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. லீனாவை சாட்சியாக விசாரிக்க போகிறேனா என்றால் எனக்கு தெரியவில்லை. தாவா சொத்து எனக்கு பாத்தியம் என்றும் வீட்டை இடித்துக் கொடுக்க சொல்லி எதிரிடை கோரிக்கை மனு தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. தாவா சொத்தில் எனக்கும், லீனாவிற்கும் தற்போது எந்த பாத்தியமும் உரிமையும் கிடையாது என்றும் அதனால்தான் எந்த எதிரிடை வழக்கும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. தாவா சொத்தை எந்த காலத்திலும் விவசாயம் செய்யவில்லை என்றால் சர்வேக்கு முன்பாக விவசாயம் செய்தேன். தாவா சொத்திற்கு நில வரி ரசீது செலுத்தியுள்ளேனா என்றால் செலுத்தவில்லை. தாவா சொத்தை எனது பங்காளிகள்தான் விவசாயம் செய்து வந்தார்கள். எனது பங்காளிகள் விவசாயம் செய்து வந்தார்கள் என்று வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல.